**தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.**

**முன்னிலை : திருமதி.T.S.P ஜெயசுதா., M.L., (TN01090)**

**தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர், தேனி.**

**2026ம் ஆண்டு ஜூலை திங்கள் 31ஆம் நாள் வெள்ளிக்கிழமை.**

**அமர்வு வழக்கு எண்.61/2020**

**(CNR No. TNTH02 – 002085 – 2025)**

| | | | |
|---|---|---|---|
| 01. | குற்றம் முறையிடுபவர் | : | தமிழ்நாடு மாநில அரசு சார்பாக – காவல் ஆய்வாளர், பழனிசெட்டிபட்டி காவல் நிலையம், குற்ற எண்.658/2020. |
| 02. | குற்றம் சாட்டப்பட்டவர்கள் பெயர், வயது, தந்தை பெயர் மற்றும் முகவரி | : | 1. கொட்டப்புலி கலைஞர் (வயது 38/2020)<br>த/பெ. முத்தையா,<br>கிழக்குத் தெரு, பத்திரகாளிபுரம்.<br><br>2. ஜக்கப்பன் (வயது 46/2020)<br>த/பெ. சங்கர்,<br>தெற்குத் தெரு, பத்திரகாளிபுரம்.<br><br>3. கருப்பசாமி (வயது 27/2020)<br>த/பெ. காளிராஜ்,<br>வார்டு 6, மேற்குத் தெரு, பத்திரகாளிபுரம்.<br><br>4. காளிராஜ் (வயது 28/2020)<br>த/பெ. முத்துராஜ்,<br>க.எண்.351, மேற்குத் தெரு, பத்திரகாளிபுரம்.<br><br>5. பாலசந்திர பாபு (வயது 27/2020)<br>த/பெ. சந்திர சேகரன்,<br>க.எண்.172/1, ராஜம்பாடி,<br>MKU கல்லூரி அருகில், மதுரை. |



JAYASUDHA T S P

Digitally signed by JAYASUDHA T S P
Date: 2026.07.31 18:18:01 +0530

| | | | |
|---|---|---|---|
| | | | 6. சித்தநாதன் (வயது 27/2020)<br>த/பெ. பாலசுப்பிரமணியன்,<br>ராஜம்பாடி, MKU கல்லூரி அருகில், மதுரை. |
| 03. | சம்பவ நாள் | : | 08.05.2020 |
| 04. | புகார் நாள் | : | 09.05.2020 |
| 05. | எதிரிகள் கைது செய்யப்பட்ட நாள் | : | 1. 1வது எதிரி (மாண்புமிகு முதன்மை மாவட்ட நீதிமன்ற Crl.M.P.No.1677/2020, 04.06.2020-ம் தேதியிட்ட உத்தரவுப்படி முன்பிணை பெற்றுள்ளார்)<br>2. 2வது எதிரி (மாண்புமிகு முதன்மை மாவட்ட நீதிமன்ற Crl.M.P.No.1421/2020, 21.05.2020-ம் தேதியிட்ட உத்தரவுப்படி முன்பிணை பெற்றுள்ளார்)<br>3. 3 முதல் 6 எதிரிகள் - 09.05.2020. |
| 06. | எதிரிகள் பிணையில் சென்ற நாள் | : | 1. 3வது எதிரி - 12.05.2020 (மாண்புமிகு முதன்மை மாவட்ட நீதிமன்றம், தேனி Crl.M.P.No. 1434/2020, 12.05.2020-ம் தேதியிட்ட உத்தரவுப்படி பிணையில் சென்றுள்ளார்)<br><br>2. 4வது எதிரி - 15.05.2020 (மாண்புமிகு முதன்மை மாவட்ட நீதிமன்றம், தேனி Crl.M.P.No. 1492/2020, 15.05.2020-ம் தேதியிட்ட உத்தரவுப்படி பிணையில் சென்றுள்ளார்)<br><br>3. 5வது, 6வது எதிரிகள் - 14.05.2020 (மாண்புமிகு முதன்மை மாவட்ட நீதிமன்றம், தேனி Crl.M.P.No. 1477/2020, 14.05.2020-ம் தேதியிட்ட உத்தரவுப்படி பிணையில் சென்றுள்ளனர்) |
| 07. | குற்ற இறுதி அறிக்கை நாள் | : | 15.08.2020 |
| 08. | எதிரிகளின் பதில் | : | பொய் குற்றச்சாட்டு |
| 09. | வழக்கின் விசாரணை | : | 22.03.2021 |



JAYASUDHA T S P
Digitally signed by JAYASUDHA T S P
Date: 2026.07.31 18:18:06 +0530

| | | | |
|---|---|---|---|
| | தொடங்கிய நாள் | | |
| 10. | வழக்கின் விசாரணை முடிவுற்ற நாள் | : | 23.01.2026 |
| 11. | நீதிமன்றத்தின் தீர்மானம் | : | 1வது எதிரி இ.த.ச. பிரிவுகள். 147, 148, 341, 294(b), 332, 307 மற்றும் 506(ii)—ன் கீழும், 2 முதல் 6 வரையிலான எதிரிகள் இ.த.ச. பிரிவுகள். 147, 148, 341, 294(b), 332 மற்றும் 506(ii)—ன்கீழும், குற்றவாளிகள் இல்லை எனத் தீர்மானிக்கப்பட்டது. |
| 12. | தீர்ப்பும் தண்டனையும் | : | **முடிவில்** இந்நீதிமன்றம் 1வது எதிரியை இ.த.ச. பிரிவுகள். 147, 148, 341, 294(b), 332, 307 மற்றும் 506(ii)—ன்கீழும், 2 முதல் 6 வரையிலான எதிரிகளை இ.த.ச. பிரிவுகள். 147, 148, 341, 294(b), 332 மற்றும் 506(ii)—ன் கீழும் குற்றவாளிகள் இல்லை என தீர்மானித்து எதிரிகளை கு.வி.மு.ச. பிரிவு 235(1)—ன்கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கின்றது. எதிரிகளின் பிணைப்பத்திரம் மேல் முறையீடு காலத்திற்கு பிறகு இரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.<br>வழக்கு சொத்தான **RPR No.11/2025** ல் கண்டுள்ள சா.பொ.1 ஆன கத்தி மேல்முறையீடு காலத்திற்கு பிறகு அழிக்க உத்தரவிடப்படுகிறது. மேலும் சா.பொ.2 ஆன கார் அதன் உரிமையாளரிடம் ஏற்கனவே ஒப்படைக்கப்பட்டுள்ள நிலையில் அதற்கான பிணை பத்திரம் மேல்முறையீடு காலத்திற்கு |



JAYASUDHA T S P
Digitally signed by JAYASUDHA T S P
Date: 2026.07.31 18:18:10 +0530

| | | | |
|---|---|---|---|
| | | | பிறகு இரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது. |
| 13. | தீர்ப்புரை நகல் எதிரிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்ட நாள் | : | --- |
| 14. | காலதாமதத்திற்கான காரணம் | : | – இல்லை – |

இவ்வழக்கு 13.10.2020ம் தேதியன்று தேனி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, மாண்புமிகு மாவட்ட நீதிமன்ற நடவடிக்கை எண்.1275/2025 நாள் 28.02.2025ன் படி இந்நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு, இந்நீதிமன்றம் முன்பாக 08.07.2026ஆம் தேதியில் விசாரணைக்காக வந்த போது அரசு தரப்பில் கூடுதல் குற்றவியல் வழக்கறிஞர் திருமதி. V. அமுதா அவர்கள் ஆஜராகியும், 1வது எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு. M.A. ராமகிருஷ்ணன் அவர்கள் ஆஜராகியும், 2வது எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு. M. மல்லீஸ்வரன் அவர்கள் ஆஜராகியும், 3 முதல் 6 வரையிலான எதிரிகளின் தரப்பில் வழக்கறிஞர் திரு. K. பாண்டியராஜன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பும் கேட்கப்பட்டு, சாட்சியங்கள், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்துவந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் ஆராய்ந்து வழங்கும்,

## தீர்ப்புரை

**01. குற்ற இறுதி அறிக்கையின் சுருக்கம்:–**

வாதி மகேந்திரன் தேனி மாவட்ட ஆயுதப் படையில் இரண்டாம் நிலைக் காவலராக பணிபுரிந்து வருகிறார். பழனிசெட்டிபட்டி காவல் நிலையத்தில் கொரானா தொற்று பாதுகாப்பு பணியில் இருந்து வந்தபோது கடந்த 08.05.2020–ம்தேதி பழனிசெட்டிபட்டி காவல் நிலையத்தில் பணிபுரியும் காவலர் 807 ஜெயராஜ்



JAYASUDHA T S P
Digitally signed by JAYASUDHA T S P
Date: 2026.07.31 18:18:15 +0530

என்பவருடன் இருசக்கர வாகன ரோந்து அலுவலாக நியமிக்கப்பட்டு இரவு 19.30 மணிக்கு கட்டுப்பாட்டு அறையில் இருந்து கிடைத்த தகவலின் பேரில் வாதி மகேந்திரனும், காவலர் ஜெயராஜ் என்பவரும் பத்திரகாளிபுரத்திற்குச் சென்றபோது இரவு 20.00 மணிக்கு பத்ரகாளிபுரம் மறவர் சாவடி முன்பு சென்றபோது பத்ரகாளிபுரத்தைச் சேர்ந்த 1 முதல் 6 வரையிலான எதிரிகள் ரோட்டில் அத்தியாவசிய வாகனங்கள் செல்வதற்கு இடையூறாக TN 57 AY 1001 என்ற வெள்ளை நிற FORD FIGO என்ற காரை நிறுத்தி வைத்து தகராறு செய்துள்ளனர். அங்கு சென்ற வாதியும், காவலர் ஜெயராஜூம் கண்டித்து வீட்டிற்குச் செல்ல அறிவுறுத்தியபோது மேற்படி எதிரிகள் அனைவரும் வாதியையும், ஜெயராஜையும் வழிமறித்து பொது ஊழியர்கள் என்றும் பாராமல் ஏண்டா தேவிடியா மகன்களா எங்களை எப்படி கேள்வி கேட்கலாம் என்று அனைவரும் அசிங்கமாக பேசியும், மேற்படி 1வது எதிரி மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து வாதி மகேந்திரனை பார்த்து இத்தோடு செத்து தொலைந்து போடா என்று கழுத்தில் குத்தவும், வாதி தனது இடது கையால் தடுத்ததில் இடது முழங்கைக்கு கீழ் கத்தியால் குத்தி சிறு தன்மையான காயத்தை ஏற்படுத்தியுள்ளார். அப்போது 2வது எதிரி கீழே கிடந்த கருங்கல்லை எடுத்து வாதியின் முதுகில் தாக்கி சிறுதன்மையான காயத்தை ஏற்படுத்தியுள்ளார். அதன்பிறகு 3 முதல் 6 வரையிலான எதிரிகள் ஜெயராஜையும் கைகளால் கன்னம் மற்றும் முதுகில் மாறி, மாறி அடித்து சிறுதன்மையான காயத்தை ஏற்படுத்தியுள்ளனர். எனவே 1வது எதிரியின் மீது இ.த.ச. பிரிவுகள். 147, 148, 341, 294(b), 332, 307 மற்றும் 506(ii)–ன்கீழும், 2வது எதிரியின் மீது இ.த.ச. பிரிவுகள். 147, 148, 341, 294(b), 332 மற்றும் 506(ii)–ன்கீழும், 3 முதல் 6



JAYASUDHA T S P
Digitally signed by JAYASUDHA T S P
Date: 2026.07.31 18:18:19 +0530

வரையிலான எதிரிகளின் மீது இ.த.ச. பிரிவுகள். 147, 148, 341, 294(b), 332 மற்றும் 506(ii)–ன்கீழும் அவர்கள் தண்டிக்கப்படவேண்டியவர்கள் என காவல் ஆய்வாளர், பழனிசெட்டிபட்டி காவல் நிலையம் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**02.** மேற்படி குற்ற இறுதி அறிக்கையானது தேனி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தால் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, எதிரிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு, எதிரிகள் ஆஜரானவுடன் எதிரிகளுக்கு வழங்கப்பட வேண்டிய அரசு தரப்பு வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச. பிரிவு. 207–ன்படி வழங்கப்பட்டுள்ளது.

**03.** இவ்வழக்கில் 1வது எதிரியின் மீது இ.த.ச. பிரிவுகள். 147, 148, 341, 294(b), 332, 307 மற்றும் 506(ii)–ன்கீழும், 2 முதல் 6 வரையிலான எதிரிகளின் மீது இ.த.ச. பிரிவுகள். 147, 148, 341, 294(b), 332 மற்றும் 506(ii)–ன்கீழும் குற்றச்சாட்டு வனைந்து விளக்கி வினவியபோது எதிரிகள் பொய் குற்றச்சாட்டு என்று மறுத்துரைத்தனர். எதிரிகள் குற்றத்தை மறுத்துரைத்ததால் வழக்கு விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

**04.** வழக்கு விசாரணை மேற்கொள்ளப்பட்டு, சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு, அரசு தரப்பில் சாட்சிகள் விசாரணை மேற்கொள்ளப்பட்டு, அரசு தரப்பில் **அ.சா.1 முதல் அ.சா.14** வரையிலான சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு, **அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.19** வரையிலான



JAYASUDHA T S P
Digitally signed by JAYASUDHA T S P
Date: 2026.07.31 18:18:23 +0530

சான்றாவணங்கள் மற்றும் **சா.பொ.1 மற்றும் சா.பொ.2** சான்று பொருட்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**05. <u>அரசு தரப்பு வழக்கு மற்றும் அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகளின் சாட்சியங்களின் சுருக்கம் பின்வருமாறு :–</u>**

(i) **அ.சா.1** தனது சாட்சியத்தில், குற்றஞ்சாட்டப்பட்ட நபர்களை தனக்கு தெரியுமென்றும், தான் தேனி ஆயுதப்படை பிரிவில் 2ம் நிலை காவலராக இருந்து PCபட்டி காவல்நிலையத்தில் கொரோனா தொற்கு பாதுகாப்பு பணிக்காக 08.05.2020ஆம் தேதி PCபட்டி காவல்நிலையத்தில் பணியிலிருந்தபோது கண்ட்ரோல்ரூமிலிருந்து இரவு 7.30 மணியளவில் காவல்நிலையத்திற்கு அழைப்பு வந்ததாகவும், அதனடிப்படையில் தானும், காவலர் ஜெயராஜ்ம், காவல்நிலையத்திற்குட்பட்ட பத்திரகாளிபுரத்திற்கு ரோந்து பணிக்கு சென்றபோது சுமார் இரவு 8மணியளவில் மறவர் சமுதாய சாவடி முன்பு கொட்டப்புலி கலைஞர், சக்கப்பன், காளிராஜ், முத்துராஜ் ஆகியோர்களுடன் மேலும் 4நபர்கள் சேர்ந்து மது அருந்தி, பாட்டு போட்டு ரோட்டில் வண்டியை நிறுத்தி வைத்து பிரச்சனை செய்து கொண்டிருந்தபோது தானும், காவலர் ஜெயராஜ்ம் கலைந்து போகச்சொல்லி சொன்னதற்கு தங்களது ஊரில் நீங்கள் ஏன் அவ்வாறு சொல்கிறீர்கள் என்றும், நீங்கள் இந்த இடத்தைவிட்டு போகவில்லை என்றால் பிரச்சனை ஆகிவிடும் என்று கூறி கொட்டம்புடி கலைஞர் கையில் வைத்திருந்த கத்தியை எடுத்து இங்கு இருந்தால் உன்னை குத்தி கொன்றுவிடுவேன் எனக்கூறி தனது கழுத்தில் குத்த வந்தபோது தான் விலகிகொண்டதாகும், கத்தி தனது இடது கையில்பட்டு இரத்தக்காயம் ஏற்பட்டுவிட்டதாகவும், சக்கப்பன் என்பவர் கீழேகிடந்த பெரிய குத்துக்கல்லை எடுத்து



JAYASUDHA T S P Digitally signed by JAYASUDHA T S P Date: 2026.07.31 18:18:27 +0530

தனது குறுக்கில் போட்டுவிட்டார் என்றும், மற்ற குற்றஞ்சாட்டப்பட்ட நபர்கள் அனைவரும் தன்னை பிடித்துக்கொண்டு கையால் மாறிமாறி தாக்கினார்கள் என்றும், அப்போது ஊரிலிருந்த பொதுமக்கள் சம்பவத்தை பார்த்து அங்கு வந்து விலக்கிவிட்டார்கள் என்றும், தான் தேனி க.விலக்கு அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றதாகவும், தான் சிகிச்சையிலிருந்தபோது PCபட்டி போலீசார் தன்னை விசாரித்தார் என்றும், தான் அவர்களிடம் புகார் வாக்குமூலமாக அளித்ததாகவும், அந்த **புகார் வாக்குமூலம் அ.த.சா.ஆ.1**என்றும், தன்னிடம் காட்டப்படும் கத்திதான் குற்றஞ்சாட்டப்பட்ட நபர் தன்னை குத்த பயன்படுத்தப்பட்ட **கத்தி அ.சா.பொ.1**என்று சாட்சியம் அளித்துள்ளார்.

(ii) **அ.சா.2** தனது சாட்சியத்தில், கடந்த 08.05.2020ஆம் தேதி PCபட்டி காவல்நிலையத்தில் 2ம் நிலை காவலராக பணியிலிருந்து இருசக்கர வாகனத்தில் தானும், முதல்நிலை காவலர் மகேந்திரனும் ரோந்து பணியிலிருந்தபோது இரவு 7.30மணியளவில் தேனி கண்ட்ரோல் ரூமிலிருந்து வந்த தகவலினடிப்படையில் பத்திரகாளிபுரம் மறவர் சாவடி முன்பு பொதுவழியினை மறித்து, பொதுமக்களுக்கு இடையூறு செய்யும்வகையில் பிரச்சனை செய்த நபர்களை அப்புறப்படுத்துவதற்காக சம்பவ இடத்திற்கு சென்றபோது TN 57 AY 1001பதிவு எண் கொண்ட போர்ட் பிக்கோ என்ற காரினை நிறுத்தி கொட்டம்புலி கலைஞர், சக்கப்பன், கருப்பசாமி, முத்துராஜ் (எ) காளிராஜ் ஆகியோர்கள் கொரோனா உத்தரவு அமலிருக்கும் நிலையில் பொதுஇடத்தில் அமர்ந்து மது அருந்திக்கொண்டிருந்தார்கள் என்றும், அவ்விடத்தைவிட்டு கலைந்து போகச்சொன்னதற்கு நீயாராடா, எங்களை எங்கள் ஊரில் வந்து எங்களை



JAYASUDHA T S P
Digitally signed by JAYASUDHA T S P
Date: 2026.07.31 18:18:32 +0530

போகச்சொல்வது தேவிடியா மகனே, நீ போடா என்று அசிங்கமாக பேசி, கொட்டம்புலி கலைஞர் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து தன்னுடன் பணியிலிருந்த காவலர் மகேந்திரனின் கழுத்தில் குத்த வந்தார் என்றும், அவரை தான் தடுத்துவிட்டதாகவும், இருப்பினும் கத்தி மகேந்திரனின் இடது கையில் குத்தி காயம்பட்டுவிட்டதாகவும், சக்கப்பன் அங்கிருந்த பெரிய பாறங்கல்லை எடுத்து மகேந்திரனின் முதுகில் தாக்கிவிட்டார் என்றும், அதில் அவருக்கு காயம் ஏற்பட்டுவிட்டதாகவும், பத்திரகாளிபுரத்தை சேர்ந்த சகாதேவன், மணிகண்டன், ராதாகிருஷ்ணன் ஆகியோர்கள் சண்டையை விலக்கிவிட்டார்கள் என்றும், குற்றஞ்சாட்டப்பட்ட நபர்கள் தங்களை கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டியதாகவும், தாங்கள் மேற்படி சம்பவம் குறித்து உயர் அதிகாரிகளுக்கு தகவல் கொடுத்ததாகவும், மகேந்திரன், அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார் என்றும், தனக்கு எவ்வித காயமும் இல்லாததால் தான் மருத்துவமனைக்கு செல்லவில்லை என்றும், சம்பவம் குறித்து PCபட்டி காவல் ஆய்வாளர் தன்னை விசாரித்தார் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

(iii) **அ.சா.3 முதல் அ.சா.7, அ.சா.10 மற்றும் அ.சா.11** ஆகிய சாட்சிகள் ஆஜர் எதிரிகளைத் தெரியும் என்றும், வழக்கு பற்றி எந்த விபரமும் தங்களுக்குத் தெரியாது என்று கூறி அரசுத்தரப்பில் பிறழ் சாட்சிகளாக விசாரிக்கப்பட்டுள்ளனர்.

**(iv)** ***அ.சா.8*** தனது சாட்சியத்தில், தற்சமயம் ஊஞ்சாம்பட்டி கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருவதாகவும், 20.05.2020ஆம் தேதி PCபட்டி காவல் ஆய்வாளர் ஒரு வழக்கு சம்மந்தமாக விசாரணை செய்ய வேண்டி காவல்நிலையத்திற்கு வருமாறு அழைப்புவிடுத்திருந்ததாகவும், தானும் வீரபாண்டி கிராம நிர்வாக அலுவலர்



JAYASUDHA T S P
Digitally signed by JAYASUDHA T S P
Date: 2026.07.31 18:18:37 +0530

ராமச்சந்திரன் என்பவரும் PCபட்டி காவல்நிலையத்தில் ஆஜரானதாகவும், குற்ற எண்.658/2020 வழக்கில் தொடர்புடைய குற்றஞ்சாட்டப்பட்ட நபரான ஜக்கப்பனை தங்கள் முன்னிலையில் விசாரணை செய்ததாகவும், அப்போது ஜக்கப்பன் மற்றும் கொட்டம்புலி கலைஞர், என்பவர் தன் முன்பு இவ்வழக்கு குற்ற சம்பத்தை ஒப்புக்கொண்டு ஒப்புதல் வாக்குமூலம் அளித்ததாகவும், ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் அருணச்சலாம் என்பவரின் தென்னந்தோப்பில் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து காட்டியதாகவும், அதனை தன் முன்பு **அ.சா.ஆ.10 அத்தாட்சியில்** கைப்பற்றியதாக சாட்சியம் அளித்துள்ளார்.

(v) **அ.சா.9** தனது சாட்சியத்தில், 09.05.2020ஆம் தேதி PCபட்டி காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியிலிருந்தபோது காலை 4.30மணியளவில் தேனி க.விலக்கு அரசு மருத்துவமனையிலிருந்து கிடைத்த மருத்துவ நமுநாவை பெற்று காலை 6.00 மணியளவில் மருத்துவமனைக்கு விரைந்து சென்று அங்கு சிகிச்சையிலிருந்த ஆயுதப்படை காவலர் மகேந்திரனை விசாரித்து அவர் கொடுத்த புகார் வாக்குமூலத்தை பதிவு செய்து காவல்நிலையத்திற்கு 6.30 மணிக்கு வந்து நிலைய குற்ற எண்.568/2020பிரிவுகள் 147, 148, 341, 294 (பி), 323, 324, 332, 307, 506 (2) இ.த.ச. படி வழக்கு பதிவு செய்து காவல் ஆய்வாளர் பார்வைக்கு வைத்ததாகவும், அந்த **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.11**என்று சாட்சியம் அளித்துள்ளார்.

(vi) **அ.சா.12** தனது சாட்சியத்தில், 08.05.2020ஆம் தேதி தேனி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணியிலிருந்தபோது இரவு 11.35மணியளவில் தேனி அரண்மனைபுதூர், முல்லை நகரை சேர்ந்த மகேந்திரன்



JAYASUDHA T S P
Digitally signed by JAYASUDHA T S P
Date: 2026.07.31 18:18:43 +0530

என்பவர் தன்னை 4 தெரிந்த நபர்கள் 08.05.2020ஆம் தேதி இரவு 8 மணியளவில் தாக்கியதாகவும், மேற்படி நபர் சுயநினைவுடன் இருந்ததாகவும், அவரது இடது முன்னங்கையில் 2 சிராய்ப்பு காயங்கள் 2 x 2 cmஅளவு மற்றும் 3 x 1 cmஅளவு கொண்ட காயங்களாக இருந்ததாகவும், அவருக்கு முதலுதவி சிகிச்சை வழங்கி உள்நோயாளியாக அனுமதித்ததாகவும், காயம்பட்ட நபருககு சிறுதன்மையான காயம் என தான் **அ.சா.ஆ.12காயச்சான்று** வழங்கியதாக சாட்சியம் அளித்துள்ளார்.

(vii) **அ.சா.13** தனது சாட்சியத்தில், 09.05.2020ஆம் தேதி தேனி மாவட்ட சைபர் கிரைம் காவல்நிலைய ஆய்வாளர் மற்றும் பழனிசெட்டிப்பட்டி காவல்நிலையத்தில் பொறுப்பு அதிகாரியாக பணியிலிருந்தபோது PCபட்டி காவல்நிலைய சார்பு ஆய்வாளர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து வைத்திருந்ததை பார்வையிட்டு தனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடத்திற்கு காலை 7.45மணியளவில் சென்று சம்பவ இடத்தை பார்வையிட்டு **அ.சா.ஆ.13 பார்வை மகசர், அ.சா.ஆ.14மாதிரி வரைபடம்** மற்றும் சம்பவ சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் தயார் செய்ததாகவும், டொம்பிச்சேரி தேவர் சிலை அருகில்ல இவ்வழக்கின் குற்றஞ்சாட்டப்பட்ட நபர்களான கருப்பசாமி, காளிராஜ், பாலசந்திரபாபு, சித்தநாதன் ஆகியோர்களை கைது செய்ததாகவும், 1ம் குற்றஞ்சாட்டப்பட்ட நபர் 03.06.2020ஆம் தேதியிலும், 2ம் குற்றஞ்சாட்டப்பட்ட நபர் 20.05.2020ஆம் தேதியிலும், 6ம் குற்றஞ்சாட்டப்பட்ட நபர் 09.05.2020ஆம் தேதியில் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்ததாகவும், குற்றஞ்சாட்டப்பட்ட நபர்கள் பயன்படுத்தி TN 57 AY 1001பதிவு எண் கொண்ட காரை அத்தாட்சியில் கைப்பற்றியதாகவும், 1, 2, 6 குற்றஞ்சாட்டப்பட்ட நபர்கள் கொடுத்த



JAYASUDHA T S P
Digitally signed by JAYASUDHA T S P
Date: 2026.07.31 18:18:47 +0530

**ஒப்புதல் வாக்குமூலங்கள் அ.சா.ஆ.15 முதல் அ.சா.ஆ.18** என்றும், **TN 57 AY 1001பதிவு எண் கொண்ட கார் அ.சா.பொ.2**என்று சாட்சியம் அளித்துள்ளார்.

(viii) **அ.சா.14** தனது சாட்சியத்தில், 13.07.2020ம் ஆம் தேதி PCபட்டி காவல்நிலையத்தில் வட்ட காவல் ஆய்வாளராக பணியிலிருந்தபோது நிலைய குற்ற எண்.658/2020 வழக்கினை பார்வையிட்டு தனது மேல்விசாரணைக்கு எடுத்துக் கொண்டதாகவும், சார்பு ஆய்வாளர் முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்து முதல் புலன் விசாரணையை காவல் ஆய்வாளர் மேற்கொண்டு 3 முதல் 6 குற்றஞ்சாட்டப்பட்ட நபர்களை கைது செய்து நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளதாகவும், 1, 2 குற்றஞ்சாட்டப்பட்ட நபர்கள் தேனி மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் முன்பிணை பெற்று நீதிமன்றத்தில் சரணடைந்து விசாரணைக்கு ஒத்துழைத்துள்ள விபரம் தெரிந்து கொண்டதாகவும், சம்பவ இடத்தை பார்வையிட்டதாகவும், 15.08.2020 ஆம் தேதி காயம்பட்ட நபருக்கு சிகிச்சை வழங்கிய மருத்துவரை விசாரித்து வாக்குமூலம் பெற்று காயச்சான்றிதழ் பெற்றதாகவும், சார்பு ஆய்வாளர் மற்றும் சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், தனது புலன் விசாரணை முடித்து குற்றஞ்சாட்டப்பட்ட நபர்கள் மீது பிரிவுகள் 147, 148, 341, 294 (பி), 323, 324, 332, 307, 506 (2) இ.த.ச.-லிருந்து பிரிவுகள் 147, 148, 341, 294 (பி), 332, 307, 506 (2) இ.த.ச-ஆக **அ.சா.ஆ.19சட்ட பிரிவு மாறுதல் அறிக்கை**யுடன் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தாக சாட்சியம் அளித்துள்ளார்.



JAYASUDHA T S P
Digitally signed by JAYASUDHA T S P
Date: 2026.07.31 18:18:51 +0530

06. இவ்வழக்கில் அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியம் முடிக்கப்பட்ட நிலையில் அச்சாட்சியங்களிலிருந்து எதிரிகளுக்கு பாதகமாக அமைந்துள்ள சாட்சிய அம்சங்களை குறித்து எதிரிகளிடம் கு.வி.மு.ச. பிரிவு. 313(1)(ஆ)–ன்படி கேள்விகளாக வனைந்து வினவிய போது, எதிரிகள் அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியத்தை மறுத்து பொய் சாட்சி என்றும், தான் குற்றவாளி இல்லை என்றும் கூறியுள்ளனர். எதிரிகள் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் உண்டா என வினவிய போது இல்லை என்று பதில் அளித்துள்ளனர். எதிரிகள் தரப்பில் சாட்சிகள் எவரும் விசாரிக்கப்படவில்லை மற்றும் சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை. 1வது மற்றும் 2வது எதிரிகளின் தரப்பில் எழுத்து மூலமான வாதுரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>07. இவ்வழக்கில் தீர்வுக்குரிய பிரச்சனை யாதெனில்:–</u>

1. இவ்வழக்கில் 1வது எதிரியின் மீது இ.த.ச. பிரிவுகள். 147, 148, 341, 294(b), 332, 307 மற்றும் 506(ii)–ன்கீழும், 2 முதல் 6 வரையிலான எதிரிகளின் மீது இ.த.ச. பிரிவுகள் 147, 148, 341, 294(b), 332 மற்றும் 506(ii)–ன் கீழான குற்றச்சாட்டுகள் அரசுத் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் எல்லாவிதமான நியாயமான சந்தேகங்களுக்கும் அப்பால் நிரூபிக்கப்பட்டுள்ளதா? அல்லது இல்லையா? என்பதேயாகும்.

<u>08. தீர்வு காணவேண்டிய பிரச்சனை குறித்த பகுப்பாய்வு –</u>

(i) இவ்வழக்கில் எதிரிகள் மீதான குற்றச்சாட்டு என்பது வாதி மகேந்திரன் தேனி மாவட்ட ஆயுதப் படையில் இரண்டாம் நிலைக் காவலராக பணிபுரிந்து வந்தபோது பழனிசெட்டிபட்டி காவல் நிலையத்தில் கொரானா தொற்று பாதுகாப்பு பணியில் இருந்து



JAYASUDHA T S P
Digitally signed by JAYASUDHA T S P
Date: 2026.07.31 18:18:58 +0530

வந்துள்ளார். கடந்த 08.05.2020-ம்தேதி பழனிசெட்டிபட்டி காவல் நிலையத்தில் பணிபுரியும் காவலர் 807 ஜெயராஜ் என்பவருடன் இருசக்கர வாகன ரோந்து அலுவலாக நியமிக்கப்பட்டு இரவு 19.30 மணிக்கு கட்டுப்பாட்டு அறையில் இருந்து கிடைத்த தகவலின் பேரில் வாதி மகேந்திரனும், காவலர் ஜெயராஜ் என்பவரும் பத்திரகாளிபுரத்திற்குச் சென்றபோது இரவு 20.00 மணிக்கு பத்ரகாளிபுரம் மறவர் சாவடி முன்பு சென்றபோது பத்ரகாளிபுரத்தைச் சேர்ந்த 1 முதல் 6 வரையிலான எதிரிகள் ரோடடில் அத்தியாவசிய வாகனங்கள் செல்வதற்கு இடையூறாக TN 57 AY 1001 என்ற வெள்ளை நிற FORD FIGO என்ற காரை நிறுத்தி வைத்து தகராறு செய்துள்ளனர். அங்கு சென்ற வாதியும், காவலர் ஜெயராஜூம் கண்டித்து வீட்டிற்குச் செல்ல அறிவுறுத்தியபோது மேற்படி எதிரிகள் அனைவரும் வாதியையும், ஜெயராஜையும் வழிமறித்து பொது ஊழியர்கள் என்றும் பாராமல் ஏண்டா தேவிடியா மகன்களா எங்களை எப்படி கேள்வி கேட்கலாம் என்று அனைவரும் அசிங்கமாக பேசியும், மேற்படி 1வது எதிரி மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து வாதி மகேந்திரனை பார்த்து இத்தோடு செத்து தொலைந்து போடா என்று கழுத்தில் குத்தவும், வாதி தனது இடது கையால் தடுத்ததில் இடது முழங்கைக்கு கீழ் கத்தியால் குத்தி சிறு தன்மையான காயத்தை ஏற்படுத்தியுள்ளார். அப்போது 2வது எதிரி கீழே கிடந்த கருங்கல்லை எடுத்து வாதியின் முதுகில் தாக்கி சிறுதன்மையான காயத்தை ஏற்படுத்தியுள்ளார். அதன்பிறகு 3 முதல் 6 வரையிலான எதிரிகள் ஜெயராஜையும் கைகளால் கன்னம் மற்றும் முதுகில் மாறி, மாறி அடித்து சிறுதன்மையான காயத்தை ஏற்படுத்தியுள்ளனர். எனவே 1வது எதிரி இ.த.ச. பிரிவுகள். 147, 148, 341, 294(b), 332, 307 மற்றும் 506(ii)-ன்கீழும், 2 முதல் 6



JAYASUDHA T S P
Digitally signed by JAYASUDHA T S P
Date: 2026.07.31 18:19:03 +0530

வரையிலான எதிரிகள் இ.த.ச. பிரிவுகள். 147, 148, 341, 294(b), 332 மற்றும் 506(ii)–ன் கீழ் தண்டிக்கப்படவேண்டியவர்கள் என்பதாகும்.

(ii) அரசுத்தரப்பை நிரூபிக்கும் பொருட்டு அ.சா.1 முதல் அ.சா.14 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.19 வரையிலான சான்றாவணங்கள் மற்றும் சா.பொ.1 மற்றும் சா.பொ.2 சான்று பொருட்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

(iii) இவ்வழக்கில் விசாரிக்கப்பட்ட அரசு தரப்பு சாட்சிகளில் அரசு தரப்பிற்கு ஆதரவாக எந்த ஒரு தனி நபரும் தனது சாட்சியத்தை முன் வைக்கவில்லை என்பது புலனாகின்றது. வழக்கின் அ.சா.1 என்பவர் புகார்தாரர் ஆயுதப் படையில் இரண்டாம் நிலைக் காவலராக பணிப்புரிந்தவர் ஆவார். இவரது சாட்சியத்தை உறுதியூட்ட மற்றொரு சாட்சியான அ.சா. 2 என்பவர் மற்றொரு காவலர் ஜெயராஜ் என்பவராகும். வழக்கு சம்பவத்தின்போது 6 எதிரிகள் ஈடுப்பட்டிருப்பதாக இவ்வழக்கு முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது ஆனால் இவ்வழக்கில் உள்ள 6 எதிரிகள் சம்பவத்தில் ஈடுப்பட்டதாக அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகிய இருவருமே தங்களது சாட்சியத்தில் சாட்சியம் அளிக்கவில்லை. அ.சா.1 தனது சாட்சியத்தில் கொட்டப்புலி கலைஞர், சக்கப்பன், காளிராஜ், முத்துராஜ் ஆகியோர் ஈடுப்பட்டதாக சாட்சியம் அளித்துள்ளார். ஆனால் முத்துராஜ் என்பவர் இவ்வழக்கின் எதிரியே கிடையாது. அ.சா.2 என்பவர் தனது சாட்சியத்தில் அ.சா.1 ன் சாட்சியத்தை ஒத்தியவாறே கொட்டம்புலி கலைஞர், சக்கப்பன், கருப்பசாமி, முத்துராஜ் (எ) காளிராஜ் ஆகியோர்கள் சம்பவத்தில் ஈடுப்பட்டதாக சொல்லியுள்ளார். ஆனால் முத்துராஜ் என்பவர் தான் இவ்வழக்கின் காளிராஜ் என்பது



JAYASUDHA T S P
Digitally signed by JAYASUDHA T S P
Date: 2026.07.31 18:19:08 +0530

முதல் முறையாக வழக்கின் சாட்சியத்தில் தான் எடுத்துரைக்கப்பட்டுள்ளது என்பது நம்பும் வண்ணம் அமையவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது.

(iv) இவ்வழக்கின் அரசு தரப்பு கூற்றின்படி 1ம் எதிரி அ.சா.1 யை கத்தியால் கொலை செய்ய முயன்றுள்ளார். ஆனால் அ.சா.1 ற்கு சாதாரன சிராய்ப்பு காயம் மட்டுமே ஏற்பட்டுள்ளது என்பது வியப்பாக உள்ளது. இவ்வழக்கில் அ.சா.1 ற்கு இரத்த காயம் ஏறப்பட்டதாக அ.சா.1 தனது முதல் விசாரணையில் தெரிவித்துள்ளார், ஆனால் அ.,சா.ஆ.12 இவரது காயச்சான்றில் அ.சா.1 ற்கு இரத்த காயம் ஏற்ப்பட்டதாக எதுவும் காணப்படவில்லை. எனவே தனக்கு ஏற்ப்பட்ட காயத்தை பொறுத்து அ.சா.1 ன் கூற்று நம்பும் வண்ணம் அமையவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது. மேலும் இது சம்பவம் அ.சா.1 ன் புகாரில் விவரிக்கப்பட்டவாறு நடந்துள்ளதா என்ற அய்யத்தை ஏற்படுத்துகின்றது. அ.சா.1 மருத்துவரிடம் தன்னை தெரியாத 4 நபர்கள் அடித்ததாக சாட்சியம் அளித்துள்ளார், ஆனால் முதல் தகவல் அறிக்கையில் இந்த 6 எதிரிகள் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. இது எவ்வாறு என்பது துலங்கவில்லை. இவ்வழக்கில் சம்பவம் 08.05.2020 ம் தேதி இரவு 20.00 மணிக்கு நடந்துள்ளது ஆனால் வழக்கிற்கான புகார் என்பது புகார் வாக்குமூலமாக மறுநாள் 09.05.2020 ம் தேதி காலை 06.30 மணிக்கு கொடுக்கப்பட்டு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. அ.சா.1 ற்கு ஏற்பட்ட காயம் பொறுத்து அவர் உடனடியாக மேல் அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியதாக உள்ளபோதும் முதல் தகவல் அறிக்கை காலதாமதமாக பதிவு செய்யப்பட்டுள்ளது என்பது அரசு தரப்பிற்கு பாதகமான ஒன்றாக இந்நீதிமன்றம் கருதுகின்றது. இந்நீதிமன்றம் மேலும் கவனித்த வகையில் அ.சா.1 ன் கை எழுதும்



JAYASUDHA T S P
Digitally signed by JAYASUDHA T S P
Date: 2026.07.31 18:19:12 +0530

நிலையில் இருந்தும் அவரிடமிருந்து புகார் பெறப்படாமல் எதனால் வாக்குமூலமாக பெறப்பட்டது என்பது துலங்கவில்லை. மேலும் அ.சா.1 பலத்த இரத்த கயாத்துடன் ம.மனையில் அனுமதிக்கப்படாத பட்சத்தில் அவர் காவல் நிலையம் தாண்டி தான் ம.மனைக்கு சென்றுள்ளார் என்பது புலனாவதால் அவர் எதனால் முதலில் புகார் கொடுக்கவில்லை என்பதும் துலங்கவில்லை.

(v) இந்நீதிமன்றம் மேலும் கவனித்த வகையில் எதிரி கத்தியால் குத்தவந்தபோது அதை அ.சா.1 தடுத்ததால் அவருக்கு இடது கையில் காயம் ஏற்பட்டதாக அவரது சாட்சியத்தை முன்வைத்துள்ளார். ஆனால் அ.சா.2 தனது முதல் விசாரணையில் சம்பவத்தை அவர் தடுத்ததாக சாட்சியம் அளித்துள்ளார். இதுவும் சம்வம் நடந்த வகையை பொறுத்து முறண்பட்ட சாட்சியம் என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது. எனவே வேறு தனி நபர் சாட்சியம் மூலமும், மருத்துவ சாட்சியம் மூலமும் அ.சா.1 ன் சாட்சியம் உறுதியூட்டப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவிற்கு வருகின்றது. இவ்வழக்கில் சம்பவம் நடந்தது பொறுத்தை அய்யம் உள்ள நிலையில் சா.பொ.1 கைப்பற்றியதை பொறுத்த கிராம நிர்வாக அலுவலரான அ.சா.8 ன் சாட்சியத்தை கருத்தில் கொள்ள இயலாது என்று இந்நீதிமன்றம் எண்ணகின்றது. எனவே வேறு வகையில் உறுதியூட்டப்படாத அ.சா.1 ன் சாட்சியத்தின் அடிப்படையில் குற்ற சம்பவம் நடந்ததாகவோ எதிரிகளை குற்றவாளிகள் என்று தீர்மானிக்க இயலாது என்று இந்நீதிமன்றம் முடிவிற்கு வருகின்றது. இந்நீதிமன்றம் மேற்சொன்ன



JAYASUDHA T S P
Digitally signed by JAYASUDHA T S P
Date: 2026.07.31 18:19:16 +0530

காரணங்களுக்காக அரசு தரப்பு வழக்கு எதிரிகளுக்கு எதிராக அய்யத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்ற முடிவிற்கு வருகின்றது.

**முடிவில்** இந்நீதிமன்றம் 1வது எதிரியை இ.த.ச. பிரிவுகள். 147, 148, 341, 294(b), 332, 307 மற்றும் 506(ii)–ன்கீழும், 2 முதல் 6 வரையிலான எதிரிகளை இ.த.ச. பிரிவுகள். 147, 148, 341, 294(b), 332 மற்றும் 506(ii)–ன் கீழும் குற்றவாளிகள் இல்லை என தீர்மானித்து எதிரிகளை கு.வி.மு.ச. பிரிவு 235(1) ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கின்றது. எதிரிகளின் பிணைப்பத்திரம் மேல் முறையீடு காலத்திற்கு பிறகு இரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.

வழக்கு சொத்தான **RPR No.11/2025** ல் கண்டுள்ள சா.பொ.1 ஆன கத்தி மேல்முறையீடு காலத்திற்கு பிறகு அழிக்க உத்தரவிடப்படுகிறது. மேலும் சா.பொ.2 ஆன கார் அதன் உரிமையாளரிடம் ஏற்கனவே ஒப்படைக்கப்பட்டுள்ள நிலையில் அதற்கான பினை பத்திரம் மேல்முறையீடு காலத்திற்கு பிறகு இரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் விரிவாக்கம் செய்யப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு, இன்று 2026–ம் ஆண்டு ஜூலை திங்கள் 31–ஆம் தேதி என்னால் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

JAYASUDHA T S P

Digitally signed by JAYASUDHA T S P
Date: 2026.07.31 18:19:21 +0530

தலைமை குற்றவியல் நீதித்துறை
நடுவர், தேனி.

01. அரசு தரப்பு சாட்சிகள் :–

| | | | |
|---|---|---|---|
| 1) | அ.சா.1 | : | மகேந்திரன் (2ம் நிலை காவல் அலுவலர்) |
| 2) | அ.சா.2 | : | ஜெயராஜ் (2ம் நிலை காவல் அலுவலர்) |
| 3) | அ.சா.3 | : | மணிகண்டன் |
| 4) | அ.சா.4 | : | காளிராஜ் |
| 5) | அ.சா.5 | : | ராஜ் |
| 6) | அ.சா.6 | : | விக்னேஷ் |
| 7) | அ.சா.7 | : | சூர்யபிரகாஷ் |
| 8) | அ.சா.8 | : | குமரேசன் |
| 9) | அ.சா.9 | : | சரவணன் (உதவி ஆய்வாளர்) |
| 10) | அ.சா.10 | : | சகாதேவன் |
| 11) | அ.சா.11 | : | ராதாகிருஷ்ணன் |
| 12) | அ.சா.12 | : | மோகனப்பிரியா (மருத்துவர்) |
| 13) | அ.சா.13 | : | அன்னமயில் (காவல் ஆய்வாளர்) |
| 14) | அ.சா.14 | : | பாலகுரு (காவல் ஆய்வாளர்) |

.02. அரசு தரப்பு சான்றாவணங்கள் :–

| வரிசை எண் | ஆவண வரிசை எண் | : | தேதி | ஆவணங்களின் விபரங்கள் | யார் மூலம் கு.செ. |
|---|---|---|---|---|---|
| 1) | அ.சா.ஆ.1 | : | 09.05.2020 | புகார் மனு | அ.சா.1 |
| 2) | அ.சா.ஆ.2 | : | 09.05.2020 | பார்வை மகஜரில் உள்ள காளிராஜ் என்பவரின் கையொப்பம் | அ.சா.4 |
| 3) | அ.சா.ஆ.3 | : | 09.05.2020 | பார்வை மகஜரில் உள்ள ராஜ் என்பவரின் கையொப்பம் | அ.சா.5 |
| 4) | அ.சா.ஆ.4 | : | 09.05.2020 | சித்தநாதன் என்பவரின் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள விக்னேஷ் என்பவரின் கையொப்பம் | அ.சா.6 |
| 5) | அ.சா.ஆ.5 | : | 09.05.2020 | அத்தாட்சியில் உள்ள விக்னேஷ் என்பவரின் கையொப்பம் | அ.சா.6 |



JAYASUDHA T S P
Digitally signed by JAYASUDHA T S P
Date: 2026.07.31 18:19:32 +0530

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 6) | அ.சா.ஆ.6 | : | 09.05.2020 | சித்தநாதன் என்பவரின் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள சூர்யபிரகாஷ் என்பவரின் கையொப்பம் | அ.சா.7 |
| 7) | அ.சா.ஆ.7 | : | 09.05.2020 | அத்தாட்சியில் உள்ள சூர்யபிரகாஷ் என்பவரின் கையொப்பம் | அ.சா.7 |
| 8) | அ.சா.ஆ.8 | : | 20.05.2020 | ஜக்கப்பன் என்பவரின் ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி | அ.சா.8 |
| 9) | அ.சா.ஆ.9 | : | 03.06.2020 | கொட்டப்புலி கலைஞர் என்பவரின் ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி | அ.சா.8 |
| 10) | அ.சா.ஆ.10 | : | 03.06.2020 | அத்தாட்சி | அ.சா.8 |
| 11) | அ.சா.ஆ.11 | : | 09.05.2020 | அச்சு முதல் தகவல் அறிக்கை | அ.சா.9 |
| 12) | அ.சா.ஆ.12 | : | 08.05.2020 | மகேந்திரனின் காயச்சான்று | அ.சா.12 |
| 13) | அ.சா.ஆ.13 | : | 09.05.2020 | பார்வை மகஜர் | அ.சா.13 |
| 14) | அ.சா.ஆ.14 | : | 09.05.2020 | மாதிரி வரைபடம் | அ.சா.13 |
| 15) | அ.சா.ஆ.15 | : | 09.05.2020 | சித்தநாதன் என்பவரின் ஒப்புதல் வாக்குமூலம் | அ.சா.13 |
| 16) | அ.சா.ஆ.16 | : | 03.06.2020 | கொட்டப்புலி கலைஞர் என்பவரின் ஒப்புதல் வாக்குமூலம் | அ.சா.13 |
| 17) | அ.சா.ஆ.17 | : | 20.05.2020 | ஜக்கப்பன் என்பவரின் ஒப்புதல் வாக்குமூலம் | அ.சா.13 |
| 18) | அ.சா.ஆ.18 | : | 09.05.2020 | அத்தாட்சி | அ.சா.13 |
| 19) | அ.சா.ஆ.19 | : | 15.08.2020 | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை | அ.சா.14 |



JAYASUDHA T S P
Digitally signed by JAYASUDHA T S P
Date: 2026.07.31 18:19:36 +0530

03. <u>அரசு தரப்பு சான்று பொருட்கள்:</u>

| வரிசை எண் | சான்று பொருள் எண் | : | தேதி | ஆவணங்களின் விபரங்கள் | யார் மூலம் கு.செ. |
|---|---|---|---|---|---|
| 1) | சா.பொ.1 | : | 03.06.2020 | இரும்பு பூண் போட்ட துரு பிடித்த கத்தி ஒன்று | அ.சா.1 |
| 2) | சா.பொ.2 | : | 09.05.2020 | TN 57 AY 1001 என்ற எண்ணுள்ள வெள்ளை நிற FORD FIGO கார் ஒன்று | அ.சா.13 |

04. <u>எதிரி தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் மற்றும் சான்று பொருட்கள்</u>– இல்லை.

JAYASUDHA T S P

Digitally signed by JAYASUDHA T S P
Date: 2026.07.31 18:19:42 +0530

தலைமை குற்றவியல் நீதித்துறை
நடுவர், தேனி.

தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.

அமர்வு வழக்கு எண்.61/2020

## வழக்கின் சுருக்கம்

| | | | | |
|---|---|---|---|---|
| i. | எதிரிகள் அடைப்புக் காவலில் இருந்த காலம் | 1. 1வது மற்றும் 2வது எதிரிகள் முன்பிணை<br>2. 3வது எதிரி – 4 நாட்கள்<br>3. 4வது எதிரி – 7 நாட்கள்<br>4. 5வது மற்றும் 6வது எதிரிகள் – 6 நாட்கள் | | |
| ii. | குற்ற இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கலான நாள் | 24.09.2020 | | |
| iii. | வழக்கு அமர்வு நீதிமன்றத்திற்கு விசாரணைக்காக அனுப்பப்பட்ட நாள் | 04.04.2025 | | |
| iv. | எதிரிகளுக்கு எதிராக குற்றச்சாட்டு வினவப்பட்ட நாள் | 22.03.2021 | | |
| 8v. | வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட பல்வகை மனுக்களும் அவற்றின் முடிவும் (குவிமுச பிரிவு 317–ன் கீழான மனு நீங்கலாக) | --- | | |
| vi. | சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள் | சாட்சிகள் | மு.வி. | கு.வி. |
| | | அ.சா.1 | 25.03.2022 | 21.04.2023 |
| | | அ.சா.2 | 25.03.2022 | 21.04.2023 |
| | | அ.சா.3 | 28.10.2022 | 28.10.2022 |
| | | அ.சா.4 | 28.10.2022 | 28.10.2022 |
| | | அ.சா.5 | 28.10.2022 | 28.10.2022 |
| | | அ.சா.6 | 18.11.2022 | 18.11.2022 |
| | | அ.சா.7 | 18.11.2022 | 18.11.2022 |
| | | அ.சா.8 | 23.06.2023 | 23.06.2023 |
| | | அ.சா.9 | 01.09.2023 | 01.09.2023 |
| | | அ.சா.10 | 22.12.2023 | 22.12.2023 |
| | | அ.சா.11 | 22.12.2023 | 22.12.2023 |
| | | அ.சா.12 | 16.02.2024 | 16.02.2024 |
| | | அ.சா.13 | 09.12.2024 | 09.12.2024 |
| | | அ.சா.14 | 04.07.2025 | 04.07.2025 |



JAYASUDHA T S P

Digitally signed by JAYASUDHA T S P
Date: 2026.07.31 18:19:48 +0530

| | | |
|---|---|---|
| vii. | எதிரிகள் கு.வி.மு.ச. பிரிவு 313(i)(b)–ன்கீழ் வினவப்பட்ட நாள் | 23.01.2026 |
| viii. | எதிரி தலைமறைவாக இருந்த காலம் மற்றும் நீதிமன்றத்தில் ஆஜரான/ ஆஜர் படுத்தப்பட்ட காலம் | --- |
| ix. | மேல் நீதிமன்றங்கள் வழங்கிய ஸ்டே உத்தரவு மற்றும் அதன் முடிவும் | இல்லை |
| x. | தீர்ப்புரை நாள் | 31.07.2026 |

JAYASUDHA T S P

Digitally signed by JAYASUDHA T S P
Date: 2026.07.31 18:19:52 +0530

தலைமை குற்றவியல் நீதித்துறை
நடுவர், தேனி.

தலைமை குற்றவியல் நீதித்துறை

நடுவர் நீதிமன்றம், தேனி.

S.C. No.61/2020

தீர்ப்புரை நாள் 31.07.2026